# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## (தொகுதி - 1)

பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் மூ. கவிதா

முனைவர் நா. சுலோசனா

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்

சாத்தூர், ஸ்ரீ இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

Page no-230-P3

# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## தொகுதி - 1

**பதிப்பாசிரியர்**

முனைவர் கோ.விசயராகவன்

முனைவர் மூ.கவிதா

முனைவர்.நா.சுலோசனா


**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

## நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும் (தொகுதி - 1) |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ.விசயராகவன்<br>இயக்குநர் (மு.கூ.பொ)<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை - 600 113.<br><br>முனைவர் மூ.கவிதா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்த்துறை, ஸ்ரீ இராமசாமி நாயுடு<br>ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.<br><br>முனைவர் நா.சுலோசனா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழமொழி (ம) மொழியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி, சென்னை - 113. |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்: 044-22542992 |
| வெளியீட்டு எண் | : | |
| ISBN | : | 978-93-85165-37-5 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2018 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கி.பி. டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | xiv+364 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 470/- (ரூபாய் நாநூற்றி எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | நவநீதம் அச்சகம், சென்னை |
| பாடம் | : | ஆய்வுக் கட்டுரைகள் |

# யாழ்ப்பாண இராசதானியில் தென்னிந்தியச் செல்வாக்கு

**திருமதி.சிவரூபி சஜிதரன்**
தொல்லியல் விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
இலங்கை

தனக்கென தனித்தன்மை கொண்டு விளங்கிய வட இலங்கைப் பண்பாடானது புவியியல் அமைப்பின் சாதக தன்மை காரணமாக, காலத்துக் காலம் தென்னிந்தியச் செல்வாக்கிற்கு உட்பட்ட நிலையிலேயே வளர்ந்து வந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொட்டு இவ்விரு பிராந்தியங்களினதும் பண்பாடானது ஒரே பிராந்தியமென சொல்லுமளவிற்கு ஒத்ததன்மையினை கொண்டுள்ளதனை வரலாற்று, தொல்லியல் மூலங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வட இலங்கைக்கும், தென்னிந்தியாவிற்குமான இவ் தொன்மையான தொடர்ச்சியான பாரம்பரிய உறவானது யாழ்ப்பாண அரசு காலத்தில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு துறைகளில் மேலும் வலுப்பெற்றிருந்தது.
சங்க காலத்திற்கு சமனான காலத்தில் இலங்கைத் தமிழரிடையே ஓர் அரசமரபு தோன்றியிருந்தது என்பதனை கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டிற்கு வந்த பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் ஆய், வேள், பெருமகன்(மருமகன்), பருமக, மருமகள் போன்ற பட்டப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றது (புஸ்பரட்ணம்:2001). அரச உருவாக்கத்திற்குரிய பலமான ஆதாரமான நாணயங்கள் இலங்கைத் தமிழருடைய அரச உருவாக்கம் பற்றிய செய்திகளுக்கு மேலும் வலுவூட்டுவதாக உள்ளன. இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களிலிருந்தே நாகதீப (நாகநாடு, உத்தரதேசம்) என வட இலங்கையானது தனித்து அடையாளப்படுத்தப்பட்டு வந்திருப்பதனை காணமுடிகின்றது. இத்தனித்துவமே காலப்போக்கில் யாழ்ப்பாண அரசாக பரிணமித்திருந்தது.

இலங்கையின் அரச உருவாக்கத்தினை சங்ககாலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் மரபு காணப்பட்டாலும் வட இலங்கையில் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட சுதந்திர தமிழரசு 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே நல்லூரைத் தலைநகராக கொண்டு ஆட்சி செய்தமைக்கே உறுதியான, முழுமையான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவ்வரசினையே தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. கி.பி 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் தலைமையில் இடம்பெற்ற வட இலங்கைப் படையெடுப்பின் விளைவே யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமாகும். இவ்வரசே 1619இல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் வரை வட இலங்கையிலும், கிழக்கிலங்கையில் சில பிரதேசங்களிலும் ஆட்சியிலிருந்தது.

தமிழ் நூல்களான வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வடமொழி நூலான தட்ஷிணகைலாச மஹாத்மியம், பாளி, சிங்கள நூல்களான சூளவம்சம், ராஜாவலிய, கோகில சந்தேஸய, சேலலிஹினி சந்தேஸய என்பனவும் வெளிநாட்டார் குறிப்புக்கள், போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆவணங்கள் மற்றும் கோட்டகம சாசனம், கள்ளியங்காட்டுச் செப்பேடுகள், பதவியா சமஸ்கிருதக் கல்வெட்டு, நாயன்மார்க்காட்டு சாசனம், மடவெலச் சிங்களக் கல்வெட்டு, நல்லூர் கோவில் சமஸ்கிருதக் கட்டியம், யாழ்ப்பாண அரசுகால நாணயங்கள், தென்னிந்தியச் சாசனங்கள், கட்டிட சிற்பக்கலை எச்சங்கள் என்பவற்றினூடாக யாழ்ப்பாண அரசு பற்றி அறிந்து கொள்ள முடிவதுடன், இவ்வரசுடனான தென்னிந்தியச் செல்வாக்கினையும் அவதானிக்க முடிகின்றது.

இலங்கை, தென்னிந்திய வரலாற்று, தொல்லியல் ஆதாரங்களை ஆராயுமிடத்து பாண்டியர் பல தடவைகள் இலங்கை மீது படையெடுத்ததனையும், வெற்றி பெற்று தமது மேலாண்மை செலுத்தியதையும், திறைபெற்றதனையும் அறியமுடிகின்றது. அதன் தொடர்ச்சியாகவே பாண்டியப் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி வட இலங்கையில் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாகவே யாழ்ப்பாண அரசு காலம் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் என இன்னொரு பெயரால் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு யாழ்ப்பாண அரசின் உருவாக்கம் தென்னிந்திய அரசான 2ஆம் பாண்டியர் செல்வாக்கினாலேயே ஏற்பட்டிருந்தது.

அடுத்து தென்னிந்தியாவில் இஸ்லாமிய ஆதிக்கத்திற்கு எதிராக இந்துப் பண்பாட்டை முன்னிறுத்தி தோற்றம் பெற்ற விஜயநகர பேரரசு காலத்திலும் இலங்கை அதன் அரசியல்,

பொருளாதார, பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. முதலாம் தேவராஜன் காலத்தில் (1422 -1446) அவன் பிரதிநிதியாக மதுரையில் இருந்த லக்கண்ண தண்டநாயக்கன் இலங்கை மீது படையெடுத்திருந்தான். இவன் தன் குதிரைப் படைகளை ஈழம், யாழ்ப்பாணத்திற்கு எதிராக கடல் வழியாக அனுப்பி வைத்தான் என திருமாணிக்குழிக் கல்வெட்டு கூறுகின்றது. 1441,1442 இற்குரிய கல்வெட்டொன்று "முதலாம் தேவராஜன் ஈழம் திறை கொண்டான்" எனக் கூறுவதால் லக்கண தண்டநாயக்கனின் யாழ்ப்பாணப் படையெடுப்பால் யாழ்ப்பாண இராச்சியம் விஜயநகர மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. இவ்வாறு விஜயநகர மன்னர்களின் மேலாதிக்கம் தமிழகத்தில் ஏற்பட்டதன் காரணமாக 14ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி பலவீனமடைந்தது. விஜயநகரப் பேரரசின் பிரதிநிதிகளாகவிருந்து மதுரையில் அரசு புரிந்த நாயக்கர் மூலமே யாழ்ப்பாணத்தில் விஜயநகரப் பேரரசின் செல்வாக்கும் மேலாதிக்கமும் ஏற்படலாயிற்று.

யாழ்ப்பாண இராசதானி மன்னர்கள் அந்நியப் படையெடுப்புக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்து கொள்வதன் பொருட்டும் தென்னிந்திய அரசுகளின் உதவியினை நாடியிருந்தனர். 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென்னிலங்கையில் ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் கோட்டை இராச்சியம் எழுச்சி பெற்ற போது 1450 இல் அவனது சேனாதிபதியான செண்பகப் பெருமாள் (சபுமல் குமாரய) யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அப்பொழுது யாழ்ப்பாண இராசதானி மன்னனான கனகசூரிய சிங்கையாரியன் நாட்டைவிட்டுத் தென்னிந்தியாவிற்கு தப்பியோடினான். செண்பகப் பெருமாளின் யாழ்ப்பாணப் படையெடுப்பின் போது கருநாடர், கேரளர், தமிழர், துளுவர், வன்னியர், சோனகர் முதலானோர் ஆரியச் சக்கரவர்த்திகள் படையில் இருந்ததாக இராஜாவலிய குறிப்பிடுகின்றது. யாழ்ப்பாணத்தில் குடியானவர்கள் இராசகாரியமாக இராணுவசேவை ஆற்றும் வழக்கம் இல்லாததால் யாழ்ப்பாண இராசதானி மன்னர்கள் தமது படைக்கான வீரர்களை பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்தே வரவழைத்திருந்தனர். செண்பகப்பெருமாள் தனது 17 வருட யாழ்ப்பாண அரசு மீதான ஆட்சியின் பின்னர் (ஆறாம் பராக்கிரமபாகுவின் இறப்பின் பின்னர்) தனது படைகளுடன் கோட்டை இராச்சியம் திரும்ப நேர்ந்தது. அதன் பின்னர் தென்னிந்தியா சென்ற கனகசூரிய சிங்கையாரியன் நாயக்கர்களதும், பிற தென்னிந்தியப் பிரதானிகளதும் (திருக்கோவலூர் மலையமான்கள்) உதவியினாலேயே யாழ்ப்பாண இராசதானி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மேலும் யாழ்ப்பாண இராசதானியின் இறுதி மன்னனான சங்கிலி போர்த்துக்கேயரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தஞ்சை நாயக்கரின் முழுஆதரவையும் பெற்றிருந்தான். இதனாலேயே போர்த்துக்கேயர் கி.பி 1619இல் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் தஞ்சை நாயக்கரின் தளகர்த்தனான வருணா குலத்தானின் படைகளை அடக்கிய பின்னரே அவர்களால் இவ்ராச்சியத்தை கைப்பற்ற முடிந்ததாக அறியமுடிகின்றது (பத்மநாதன், 2011).

பதவியாவில் கிடைக்கப்பெற்ற 13ஆம் நூற்றாண்டுக்குரியதான சமஸ்கிருத மொழிச்சாசனம் ஒன்று வேளைக்காறப் படையின் நாயகனாகிய உலோகநாத தண்டநாயகனுக்கும் சேது (ஆரியச் சக்கரவர்த்தி) குலத்திற்கும் உள்ள தொடர்பினை சுட்டிக் காட்டுகின்றது (பத்மநாதன், 2011). இங்கு வேளைக்காறப்படைப் பிரிவினர் தென்னிந்திய சோழநாட்டுத் தொடர்புடையவர்களாவர். யாழ்ப்பாண இராசதானி கால விபரங்களினை தென்னிந்திய சாசனங்களினூடாகவும் அறிய முடிகின்றமையும் குறிப்பாக கி.பி 13ஆம் நூற்றாண்டிலே சிறந்து விளங்கிய 2வது பாண்டியப் பேரரச மன்னர்களான ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் குறிப்பாக மாறவர்மன் குலசேகரன் கால சாசனங்கள், தென்பாண்டி நாட்டில் ஆட்சி செய்த அரிகேசரி பராங்குசவர்மன், சில விஜயநகரப் பெருமன்னர், தஞ்சாவூர் நாயக்க மன்னர் முதலியோரின் சாசனங்கள் சிலவற்றில் யாழ்ப்பாண இராதசானி பற்றிய விபரங்கள் கிடைப்பதிலிருந்து இவ்வரசுடனான தென்னிந்தியச் செல்வாக்கினையே புலப்படுத்துகின்றது.

வடஇலங்கை தமிழருடைய சமுதாய அமைப்பு, சமூக வழமைகள், சொத்துரிமைகள் பற்றிய வழமைகள் வலுப்பெறும் வகையினதாக நல்லூர் இராசதானிக்குரிய நிர்வாக முறை ஆரியச் சக்கரவர்த்திகளால் ஏற்படுத்தப்பட்டது. இவ் நிர்வாக முறைகளில் சோழ, பாண்டிய, விஜயநகர காலத்திற்குரிய செல்வாக்கினை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண அரசுகாலத்தில் பாண்டி நாட்டுத் தொடர்புடைய பிரதானிகள் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகித்ததாக அறிய முடிகின்றது (பத்மநாதன், 2011). யாழ்ப்பாண இராசதானி நிர்வாகத்தில் முக்கியம் பெற்ற நிர்வாக அலகுகளான முதலியார், கண்காணி, உடையார், மணியக்காரன் போன்ற பதவிகள் மற்றும் அதிகாரிகளை நியமிக்கும் வழக்கமும் தென்னிந்தியச் செல்வாக்கின் விளைவாகவே இங்கு ஏற்பட்டிருந்தது (பத்மநாதன், 2011). குறிப்பாக தமிழ் நாட்டில் விஜயநகர ஆட்சியில் ஏற்பட்ட மணியக்காரன் எனும்

பதவி விஜயநகரச் செல்வாக்கின் விளைவாகவே மணியம் என்ற பதவியைப் பெற்ற தலைவர்கள் யாழ்ப்பாண மன்னர்கள் நிர்வாகத்தில் இடம்பெற்றிருந்தனர் எனலாம். யாழ்ப்பாண மன்னர் காலத்தில் வழக்கிலிருந்த வரி அறவிடும் முறைகளும் தென்னிந்தியச் செல்வாக்கின் பிரதிபலிப்பாகவே காணமுடிகின்றது. குறிப்பாக யாழ்பாணத்தரசர்கள் கால தலைவரி தமிழகத்தில் வழக்கிலிருந்த ஆள்வரி, பிள்ளைவரியினை ஒத்ததாகவும், அதிகாரவரி என்பது விஜயநகரப் பேரரசர் காலங்களிலே தமிழகத்திலே காணப்பட்ட அதிகாரிக்கம் என்பதை ஒத்ததுமாகும்.

யாழ்ப்பாண இராசதானி தென்னிந்தியாவுடன் நெருங்கிய, பரஸ்பர வர்த்தக தொடர்புகளை கொண்டிருந்தது. யாழ்ப்பாண இராசதானி பொருளாதார பலத்தில் சிறப்புற்றிருந்ததனை 14ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்த சிங்கள இலக்கியமான இராஜாவலிய குறிப்பிடும் போது, ''இலங்கையில் இருந்த மூன்று மன்னர்களுள் சேனாபலத்திலும், பொருட்பலத்திலும் ஆரியச் சக்கரவர்த்திகளே மேலோங்கியிருந்தனர். அதனாலேயே அவன் மலை நாட்டிலிருந்தும் ஒன்பது துறைமுகங்களிலிருந்தும் திறைபெற்றான்'' எனக் குறிப்பிடுகின்றது. கி.பி 1344இல் இலங்கை வந்த இபுன் பற்றூற்றா யாழ்ப்பாண இராசதானி கால வாணிபச் சிறப்பினை பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''அக்காலப் பகுதியில் முத்து வாணிபத்தினை யாழ்ப்பாணத்தரசன் நேரடி கண்காணிப்பில் வைத்திருந்தமையும், கறுவா வியாபாரம் அவனது கட்டுப்பாட்டில் இருந்தமையும், பெருந்தொகையான வாணிப கப்பல்கள் இங்கு இருந்ததாகவும், ஒரு சமயத்திலே யெமன் தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவனுடைய நூறு கப்பல்களைக் கண்டதாக கூறுகின்றார்''. இக் குறிப்பிலிருந்து யாழ்ப்பாண மன்னர்கால பொருளாதார சிறப்பினை அறிந்து கொள்ள முடிகின்றது. இப் பொருளாதார பலமானது யாழ்ப்பாணத்தரசர்கள் கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கையின் பின்னனியில் உருவாக்கப்பட்டதென்பது மறுக்க முடியததாகும். இவ் வர்த்தக நடவடிக்கையினுள் தென்னிந்தியாவே முதன்மை பெற்றிருந்தது. மலையாளம், சோழமண்டலக் கரை ஆகியவற்றோடு நடந்த வாணிபமானது யாழ்ப்பாணப் பொருளாதாரத்தில் உயிர்நாடியாகவிருந்தது.

யாழ்ப்பாண இராசதானியில் உள்ள ஊர்காவற்துறை, கொழும்புத் துறை, காங்கேசன் துறை, பருத்தித்துறை, கச்சாய், மன்னார், அரிப்பு, மாதோட்டம் போன்ற துறைமுகங்களூடாக தென்னிந்தியாவுடன் நெருங்கிய வர்த்தக தொடர்பினை கொண்டிருந்தது. யாழ்ப்பாண இரசதானியில் கிடைத்த முத்து, யானை, சங்கு,சாயவேர், பனையும் அதன் பொருட்களும் தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட, பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு, இரும்பு, மென்மையான புடவைகள், உணவுப்பொருட்கள் என்பன தென்னிந்தியாவிலிருந்து வட இலங்கைக்கு எடுத்து வரப்பட்டன. 1566இல் விஜயநகர பேரரசிற்க்கு வருகை தந்த புர்டிபாசா என்பவன் பாண்டிநாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற முத்துக் குளிப்பு பற்றிக் கூறுகையில் இலங்கையிலிருந்து பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறத்திலான முத்துக்கள் விஜயநகருக்கு இறக்குமதி செய்யப்பட்டதாக கூறுகின்றார். விஜயநகர, பாமினி அரசில் ஈழத்து யானைகள் தேவைப்பட்டன. 16ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற ஹரிவிலாசம் என்ற நூலில் அவசிதிப்பையச் செட்டி இவ்வரசிற்கு தேவையான யானைகளையும், முத்துக்களையும் ஈழத்திலிருந்து பெற்றுக் கொடுத்தான் எனக் கூறுகின்றது. மேலும் சோழ, பாண்டிய நாணயங்களைத் தொடர்ந்து விஜயநகர நாயக்கர் கால நாணயங்கள் பலவும் வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டமையும் யாழ்ப்பாணத்தரசர் கால தென்னிந்தியச் செல்வாக்கினை புலப்படுத்துகின்றது.

யாழ்ப்பாண இராசதானி காலமானது வடஇலங்கையில் ஏற்கனவே இருந்த இந்துமத நம்பிக்கைகள், கிராமிய தெய்வ வழிபாட்டம்சங்கள் (கண்ணகி வழிபாடு) மற்றும் சோழ, பாண்டியப் பேரரசு காலத்தில் சிறப்பு பெற்ற இந்துமத அம்சங்கள் என்பவற்றின் தொடர்ச்சியான இந்துமதம் வளம்பெற்ற காலமாக அமைகின்றது. தற்கால இந்துமத அம்சங்களின் வளர்ச்சி நிலையினை யாழ்ப்பாண அரசர் காலத்துடன் தொடர்ப்புபடுத்தி பார்க்க முடிகின்றது. தென்னிந்தியாவில் யாழ்ப்பாண இராசதானி காலத்தவரின் சம காலத்தவரான விஜயநகர பேரரசில் இந்துமதமும் அவை சார்ந்த கட்டிட, சிற்பக் கலை மரபுகளும் பிரமாண்டமான வளர்ச்சியைப் பெற்றிருந்ததுடன் அவற்றின் செல்வாக்கினையும் இவ்வரசில் காணமுடிகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகள் பிராமண குலத்தவராததால் அவர்கள் இந்துசமய பாதுகாவலாராக விளங்கியதோடு, அவர்களுடைய அரசாட்சி முறைகள் கூட இந்துமத முறைகள், நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. ஆரியச் சக்கரவர்த்திகள் தமது சொந்த இடமான இராமேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பு காரணமாகவே ''சேது'' என்ற மொழியினை தமது

அரசிற்குரிய மங்கலச் சொல்லாக மாற்றியிருந்தனர் என்பதை அறிஞர்கள் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர் (பத்மநாதன் 2011., சிற்றம்பலம் 2006). இவ்வாறு சேது என்ற மொழியினை மங்கலச் சொல்லாகவும், சிவ சின்னமாகிய நந்தியினை அரச சின்னமாகவும் கொண்டிருந்தனர் என்பதனை அவர்கள் கால நாணயங்கள், கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண இராசதானி மன்னர்கள் இந்துமத நம்பிக்கையின் அடிப்படையிலும், தென்னிந்திய செல்வாக்கினை பிரதிபலிக்கும் விதமாகவும் சேதுகாவலன், கங்கைநாடன் போன்ற விருதுப் பெயர்களை சூடியிருந்தனர். சேது தலமாகிய இராமேஸ்வரத்தினையும், பாக்கு நீரிணை பகுதியான சேது சமுத்திரத்தினையும் பாதுகாக்கின்ற சிறப்பினையுடைய மன்னர்களாதலால் சேதுகாவலன் என்றும், இந்துக்களின் புனித தீர்த்தமான கங்கையுடன் கொண்ட தொடர்பினை குறிக்கும் முகமாக கங்கைநாடன் எனவும் அழைக்கப்பட்டனர். புனித தீர்த்தமான கங்கையுடன் கொண்ட தொடர்பினைப் போன்று யமுனா தீர்த்தத்திலும் ஈடுபாடு கொண்டவர்களாக யாழ்ப்பாணத்தரசர்கள் விளங்கியமைக்கு யமுனா ஏரி மிகச்சிறந்த உதாரணமாகும். கள்ளியங்காட்டுச் செப்பேடுகளிலொன்று யாழ்ப்பாண அரசனான பரராஜசேகரன் சைவர்களின் புனிதத் தலமான தமிழகத்தில் அமைந்துள்ள சிதம்பரத்திற்கு வழங்கிய தானங்கள் பற்றியும், அவ் அறக் கட்டளைகளின் பொருட்டு அச்சுவேலி, புத்தூர், அளவெட்டி ஆகிய ஊர்களை மானியமாக கொடுத்திருந்தமை பற்றியும் குறிப்பிடுகின்றது. பரராசசேகரன் மடமானது சமகாலம் வரை சிதம்பரத்திலே நிலைபெற்றிருந்தமை சிறப்பம்சமாகும். இவற்றிலிருந்து யாழ்ப்பாண மன்னர்கள் இந்து சமயத்தின் மீது கொண்டிருந்த பற்றினையும், தமிழகத் தொடர்பினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் இந்து ஆலயங்கள் பல அமைக்கப்பட்டிருந்ததனை இவ்வரசர் கால தமிழிலக்கியங்கள் மற்றும் போர்த்துக்கேய நூல்களிலிருந்து அறியமுடிகின்றது. யாழ்ப்பாண வைபவமாலையானது, யாழ்ப்பாணத்திற்கு வந்த ஆரியச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்ட சிங்கையாரியன் நல்லூரில் அரசநகர், அரசமாளிகை, கூடகோபுரம், பூங்கா, ஸ்தானமண்டபம், முப்படைக் கூடம் போன்றவற்றை உண்டாக்கி யமுனா நதித் தீர்த்தம் கலந்த ஏரி, நீதி மண்டபம், யானைப்பந்தி, சேனாவீரர் இருப்பிடம் முதலானவற்றையும் கட்டுவித்து பிராமணரை இருத்தி கீழ்திசைக்குப் பாதுகாப்பாக வெய்யிலுகந்த பிள்ளையார் கோவில், மேற்றிசைக்குப் பாதுகாப்பாக வீரகாளி அம்மன் கோவில், வட திசைக்குப் பாதுகாப்பாக சட்டநாதர் கோயில், தையல் நாயகி அம்மன் கோவில், சாலை விநாயகர் கோயில் என்பவற்றை அமைத்திருத்தான் எனக் கூறுகின்றது. யாழ்ப்பாண இராசதானி காலத்துக்குரியதென அறியப்படும் கோயில்கள் இன்று தற்கால கலைமரபுகளுடன் இணைந்தாக மாற்றத்திற்கு உள்ளாகியிருந்த போதிலும், இவ்விலக்கியங்களில் சொல்லப்பட்ட பெயர்களாலேயே இன்றும் அறியமுடிவது குறிப்பிடத்தக்கதாகும். இக் கோயில் கட்டிட, சிற்பக்கலை கூறுகள் பற்றி இன்று அறிய முடியவில்லை ஆயினும் கிடைக்கப்பெற்ற ஒரு சில எச்சங்களினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக யாழ் கோட்டைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்துக் கோயில் கட்டிடப் பாகங்கள், இவ்விரசதானி அமைந்திருந்த பகுதியென கருதுமிடங்களில் காணப்படும் இந்துக் கோயில் விக்கிரங்கள் என்பன தென்னிந்திய கலைமரபுகளின் செல்வாக்கினை புலப்படுத்துவனாக உள்ளது.

நீண்டகாலம் சிறப்புபெற்றிருந்த (350 வருடங்கள்) யாழ்ப்பாண இராசதானி கால கட்டிட, சிற்பக் கலைமரபுகள் பற்றி தமிழ், சிங்கள நூல்கள் போர்த்துக்கேய ஆவணங்களிலிருந்து அறிய முடிந்தாலும், அவ்வாறான கட்டிட, சிற்பக் கலைமரபுகளை இன்று அடையாளம் காணமுடியாதுள்ளது. இவ்வாறானதொரு நிலைமைக்கு யாழ்ப்பாண இராசதானியினை வெற்றி கொண்ட போர்த்துக்கேயர் கடைப்பிடித்த கலையழிவு நடவடிக்கையே முக்கிய காரணமாக அமைந்ததென்பதினை போர்த்துக்கேய ஆவணங்கள் மற்றும் யாழ்கோட்டை மேலாய்வு, அகழ்வாய்வு நடவடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்துக்கோயில் கட்டிட பாகங்கள், ஏனைய கட்டிட அழிபாடுகள் என்பன உறுதிப்படுத்தப்படுகின்றன. எனினும் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியிலும், பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்ட மதச்சுதந்திரம் இங்கு இந்துக் கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஏனைய கட்டிடங்கள் என்பவற்றை சுதேச கலைமரபுடன் இணைந்த வகையில் அமைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருந்தது. இதன் பிரதிபலிப்பாகவே யாழ்ப்பாண இராசதானிக்குரியதாக இன்று அடையாளப்படுத்தப்படும் மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, கல்தோரணவாசல், யமுனா ஏரி, யாழ்ப்பாண இராசதானி கால நாற்றிசைக் கோயில்கள் ஏனைய ஆலயங்கள் என்பவற்றைக் காணமுடிகின்றது. சங்கிலியன் தோப்பு, மந்திரிமனை, யமுனா ஏரி, பண்டாரக்குளம், இராசாவின் தோட்டம் போன்ற பெயர்கள் யாழ்ப்பாண இரதானியினை

நினைவுபடுத்தக் கூடியதாகவே அமைந்துள்ளன. மேலும் நாற்றிசைக் கோயில்கள், நல்லூர் கந்தசாமி கோவில், பரராஜசேகர பிள்ளையார் கோவில் போன்ற பல ஆலயங்களின் பெயர்களும் யாழ்ப்பாண இராசதானி நூல்களில் உள்ளவாறு அறியப்படுவதும் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் கட்டிட, சிற்பக் கலைமரபு பெற்ற வளர்ச்சியினையே எடுத்துக்காட்டுவதுடன், யாழ்ப்பாணத்தரசர்களின் சம காலத்தவரானான விஜயநகர நாயக்கர் காலத்தினதும், அதற்கு முற்பட்ட சோழ, பாண்டிய கலைமரபுகளினதும் செல்வாக்கினை பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும் (நவரத்தினம், 2007).

மேற்கூறப்பட்ட கருத்தினை பிரதிபலிப்பாகவே நல்லூர் பூதவராயர் திருக்குளத்திலிருந்து மீட்கப்பட்ட சனிஸ்வரன், தட்சணமூர்த்தி, விநாயகர், உமாதேவி, வள்ளி தெய்வயானை சமேத மயில்வாகனர் ஆகிய தெய்வச் சிலைகளும், யாழ்ப்பாணம் கமால் வீதிப்பகுதியில் கிடைக்கப்பெற்ற தெய்வச் சிலைகளும் அமைந்துள்ளன. இச்சிற்பங்களில் பெரும்பாலானவை நாவலர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கமால் வீதியில் கிடைக்கப்பெற்ற மகிஷாசுரமர்த்தினியின் செப்புப்படிமம், கஜலஷ்மியின் கருங்கற் சிற்பம் மற்றும் மேற்கூறப்பட்ட வள்ளி தெய்வயானை சமேத மயில்வாகனர் சிற்பங்கள் என்பன தென்னிந்திய விஜயநகர நாயக்கர் கலைப்பாணியைச் சேர்ந்ததாக குறிப்பாக கி.பி14ஆம் நூற்றாண்டிற்க்கும் 16ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டதாக அடையாளம் காணமுடிகின்றது (கிருஸ்ணராஜா, 2006).

யாழ்ப்பாண மன்னர்கால நாணயங்களிலும் தென்னிந்தியச் செல்வாக்கினை அவதானிக்க முடிகின்றது. .ஆரியச்சக்கரவர்த்தி கால முற்பகுதி சேது நாணயங்களில் சோழக்காசுகளின் செல்வாக்கு இருப்பதனை H.W.Codrington (H.W.Codrington ,1924,88,90&95) எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். மேலும் யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்கள் மற்றும் தென்னிந்திய நாணயங்கள் என்பவற்றில் காணப்படும் குறியீடுகள், சின்னங்கள் என்பவற்றுக்கிடையே ஒருமைத்தன்மை கொண்டு விளங்குவதனை காணலாம். இவ்வரசர் கால நாணயங்களில் பரவலாக காணப்படும் சேது எனும் மொழிப்பிரயோகம் தென்னிந்திய சேது தலத்துடன் கொண்ட தொடர்பென அறிஞர்கள் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஈழத் தமிழரை யாழ்ப்பாணத் தமிழரோடு தொடர்ப்புபடுத்தி பார்க்கும் மரபு தொன்றுதொட்டு வளர்வதற்கு யாழ்ப்பாண இராசதானிகால அரசியல், பொருளாதார, சமூக பாரம்பரியமே அடிப்படையாக அமைந்து கொண்டது. இவ்வாறானதொரு பாரம்பரியத்தின் உருவாக்கத்திற்கு தென்னிந்தியா செல்வாக்கும் குறிப்பிடத்தக்களவில் இருந்துள்ளதென்பது மறுக்கமுடியததாகும். வட இலங்கையில் முக்கியம் பெற்ற யாழ்ப்பாண இராசதானிகால தொல்லியல் எச்சங்களில் பெரும்பாலானவை பல்வேறு காரணங்களால் அழிவுக்குட்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் முழுமையான தொல்லியல் அகழ்வாய்வுகள் இடம்பெறுமேயானால் மேலதிக தகவல்கள் வெளிவரக்கூடும்.

**உசாத்துணை நூல்கள்**


1. பத்மநாதன், சி., 2011, யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
2. புஸ்பரட்ணம். ப., 2006, (பதிப்பாசிரியர் சிற்றம்பலம்.சி.க) யாழ்ப்பாண தொன்மை வரலாறு - தொல்லியல் கருவூலங்கள், குமரன் அச்சகம், கொழும்பு – சென்னை.
3. கிருஸ்ணராஜா.செ., 2006, (பதிப்பாசிரியர், சிற்றம்பலம்.சி.க) யாழ்ப்பாண தொன்மை வரலாறு – சிற்பம், குமரன் அச்சகம், கொழும்பு – சென்னை.
4. புஸ்பரட்ணம்.ப., 2001, இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள், பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
5. பத்மநாதன்.சி., 2009, விஜயநகர கலைப்பாணி, விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும் ஆய்வரங்கு, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
6. புத்மநாதன்.சி., 2006, இலங்கையில் தமிழ் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
7. Rasanayagam.C., 1926, Ancient Jaffna, A.S Everyman's Publishers Ltd, Madras.

Codrington .H.W., 1924, Ceylon Coins and Currency, Colombo.